# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 250/2012**

**பெயர்: சின்னராஜு** **நாள்: 21.01.2026**

பி.வா.சா.2 - வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

பி.வா.சா.2 - சின்னராஜு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u> : 12:15

1-3 எதிர்மனுதாரர்கள் பெயரில் 4-ம் எதிர்மனுதாரர் கிரைய ஒப்பந்தம் செய்ததாகத்தான் எங்களுடைய வழக்கு என்றால், சரிதான். மனுதாரர்களின் வழக்கானது 4-ம் எதிர்மனுதாரர் மணிவாசகத்திற்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரயம் ஏற்பட்டதற்கு பின்னிட்டு மோசடியாக எதிர் மனுதாரர்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்பதுதான் மனுதாரர்களின் வழக்கு என்றால், சரிதான். கிரய ஒப்பந்தம் எப்போது ஏற்படுத்திக்கொண்டோம் என்றால், 11.03.2008 ஆகும். எவ்வளவு தொகைக்கு கிரயம் பேசிக்கொண்டோம் என்றால், ரூ.1,00,000/- ற்கு பேசினோம்.கிரய பத்திரம் எழுதிக்கொடுக்க 6 மாத காலம் அவகாசம் என்று பேசிக்கொண்டோம். கிரய பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால், இல்லை. பதிவு செய்யப்படாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதேனும் இருக்கிறதா என்றால், இல்லை. எவ்வளவு ரூபாய் தாளில் எழுதிக்கொண்டோம் என்றால், ரூ.20 தாளில் எழுதிக்கொண்டோம். கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட பத்திரத்தில் சுவாதீனம் கொடுக்கப்பட்டதாக வாசகம் உள்ளதா என்றால், உள்ளது. சுவாதீனம் உண்மையாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற வாசகம் கிரய ஒப்பந்த பத்திரத்தில் இருந்தால் அதை கண்டிப்பாக பதிவு செய்திருக்கவேண்டும் என்றால், அப்படி அவசியம் இல்லை. கிரய ஒப்பந்தம் உண்மையாக ஏற்படுத்திக்கொண்டிருந்தால் பதிவு செய்திருப்பேன் என்றும், மோசடியாக ஏற்படுத்திக்கொண்டதால்தான் எங்களுக்கு ஆதரவாக வாசகங்களை எழுதிக்கொண்டோம் என்றால், சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் எத்தனை சாட்சிகள் கையொப்பம் செய்தார்கள் என்றால், 2 சாட்சிகள். அவர்கள் யார் யார் என்றால், S.அருணாச்சலம் மற்றும் ராஜாகண்ணு ஆவார்கள்.நான் தாக்கல் செய்த அ.வ.எண்.217/2008 வழக்கில் வாதிகளாகிய எங்களையோ அல்லது கிரய

ஒப்பந்தத்தில் சாட்சிகளாக சொல்லப்பட்ட நபர்களையோ, அதைத் தயார் செய்ததாக சொல்லப்படும் ஜெயபாலன் என்பவரையோ இந்த நீதிமன்றத்தில் சாட்சிளாக விசாரித்துள்ளோமா என்றால், எனக்கு நியாபகம் இல்லை. நான் சாட்சி சொல்லவில்லை என்றும் எனக்கு நியாபகம் இல்லை என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.கிரய ஒப்பந்தம் சம்பந்தமாக கிரயம் செய்து கொடுக்க அறிவிப்பு ஏதும் அனுப்பினேனா என்றால், ஆமாம், எ.ம.சா.3 படி அனுப்பினேன். அறிவிப்பு அனுப்பவேண்டும் என்று சொன்னது யார் என்றால், நாங்கள்தான். கிரய ஒப்பந்தத்தை காமித்து அறிவிப்பு அனுப்பவேண்டும் என்று வழக்கறிஞரிடம் கூறினோமா என்றால், சரிதான். எங்களுடைய வழக்கறிஞர் யார் என்றால், சங்ககிரி வழக்கறிஞர் திரு.R.சேகர் ஆவார். அவர் அனுப்பிய அறிவிப்பின் சங்கதிகளை நாங்கள் படித்து பார்த்தோமா என்றால், படித்து பார்த்தோம் அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் சரிதான். நாங்கள் அனுப்பிய அறிவிப்பில் பாலசுப்ரமணியம் கிரய அசல் பத்திரம் கொடுத்ததாகவும், சுவாதீனம் ஒப்படைத்தது சம்பந்தமாகவும் வாசகம் உள்ளதா என்றால், அசல் ஆவணம் ஒப்படைத்ததாக வாசகம் உள்ளது ஆனால், இல்லை. உண்மையில் சுவாதீனம் கொடுக்கப்பட்டிருந்தால் நாங்கள் அனுப்பிய அறிவிப்பில் சுவாதீனம் ஒப்படைத்த வாசகம் இருந்திருக்கும் என்றால், சரியல்ல. பாலசுப்ரமணியம் மணிவாசத்திற்கு 05.06.2008 அன்று கிரயம் செய்து கொடுத்துள்ளார் என எனது முதல் விசாரணையில் சொல்லிஉள்ளேன் என்றால், சரிதான். அ.வ.எண்.250/2012 வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு 05.06.2008 தேதியன்று கிரயம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தவறு என்றால், சரியல்ல. 05.06.2008 தேதியன்று ஏற்படுத்திய கிரயத்திற்கு பின்னிட்டுதான் மோசடியாக கிரய ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றும் அதனை அனுசரித்து வழக்கறிஞர் மூலம் அறிவிப்பை அனுப்பினோம் என்றால், சரியல்ல. 10.06.2008 மேற்படி அறிவிப்பினை அனுப்பிய காலத்திலேயே 05.06.2008 ல் பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு கிரயம் ஏற்படுத்திக்கொண்ட விவரம் எங்களுக்கு நன்கு தெரியும் என்றால், சரியல்ல. 05.06.2008 தேதிக்கு பின்னிட்டுதான் முன்பு வாங்கி வைத்திருந்த பத்திரத்தில் நாங்களும் பாலசுப்ரமணியமும் வஞ்சக கூட்டு சேர்த்து கொண்டு மோசடியாக கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால், சரியல்ல. மணிவாசகத்திற்கு கிரயம் செய்துகொடுத்த காலத்தில் பாலசுப்ரமணியம் அவருடைய அசல் கிரய பத்திரம் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்று சொல்லிதான்

மணிவாசகத்திற்கு கிரயம் செய்துகொடுத்தார் என்றும் பின்னிட்டு பாலசுப்ரமணியம் அசல் ஆவணத்தை வைத்துக்கொண்டு நாங்கள் மோசடியாக கிரய ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால், சரியல்ல(இந்த கேள்விக்கு 1-3 எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்தார்). எங்களிடம் தான் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட காலத்தில் இருந்து சுவாதீனம் இருக்கிறது என்பதனை நிரூபிக்க இந்த நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. உண்மையில் நாங்கள் சுவாதீனத்தில் இருந்திருந்தால் இந்த நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்திருப்போம் என்றும் சுவாதீனத்தில் இல்லை என்பதால்தான் எந்த ஆவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால், சரியல்ல. சட்டப்படி பட்டா வழங்கவேண்டும் என்றால், வருவாய்துறையினர் நேரில் வந்து பார்வை இட்ட பின்னிட்டு யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதனை பார்த்த பின்னிட்டு பட்டா வழங்குவார்கள் என்றால், நடைமுறைப்படி எனக்கு தெரியவில்லை. கிரய பத்திரத்தின் அடிப்படையிலும் சுவாதீனத்தின் அடிப்படையிலும் மணிவாசகத்திற்கும் பின்னிட்டு பச்சமுத்துவிற்கும் தற்போது அருள்முருகனுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியாது. இன்று தேதிவரை வழக்கு சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால், அருள்முருகன் பெயரில் உள்ளது. தான செட்டில்மெண்ட் பத்திரம் அருள்முருகன் பெயரில் உள்ளது என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. மணிவாசகம் பச்சமுத்திற்கு கிரயம் ஏற்படுத்திக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். இந்த வழக்கு சொத்தைப் பொறுத்து பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு ஏற்படுத்திய கிரய பத்திரம், மணிவாசகம் பச்சமுத்துவிற்கு ஏற்படுத்திய கிரய பத்திரம், பச்சமுத்து தான செட்டில்மெண்ட் ஏற்படுத்திய பத்திரம் ஆக 3 பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் கொண்டது என்றால், அ.வ.எண்.250/2012 வழக்கிற்கு பின்னிட்டுதான் எனக்கு தெரியும். மேற்கூறிய 3 பத்திரங்களும் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், அது செல்லத்தக்கது அல்ல என்றும் இந்த நீதிமன்றத்தில் நாங்கள் எந்த பரிகாரமும் நாங்கள் கேட்கவில்லை என்றால், வழக்கு நிலுவையில் இருந்ததால் கேட்கவில்லை.அ.வ.எண்.49/2009 வழக்கிலேயே அ.வ.எண்.217/2008 வழக்கைப்பற்றி எங்களுடைய பதிலுரையில் கூறியுள்ளோம் என்றால், சரிதான் மேற்படி பதிலை 14.10.2019 ல் தாக்கல் செய்துள்ளோம். 05.06.2008 தேதியன்று கிரயம் பெற்ற பின்னிட்டு அ.வ.எண்.217/2008 ல் மோசடியாக தீர்ப்பை பெற்று கொண்டோம்

என்றும், அது மணிவாசகத்தைக் கட்டுப்படுத்தாது என்றும், ஆகவே வழக்கு சொத்து மணிவாசகத்திற்கே உரியது என்று விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக அவருடைய அமைதியான சுவாதீனத்தை நீங்கள் இடையூறு செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டு இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.49/2009 தாக்கல் செய்தார் என்றால், சரிதான். இந்த வழக்கில் இந்த நீதிமன்றம் எங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக மணிவாசகம் கோரியபடி வழக்கு சொத்தானது மணிவாசகமே முழு உரிமையாளர் என்றும், அவரது அமைதியான சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்று ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால், சரிதான். நாங்கள் வழக்கறிஞர் மூலமாக கேவியேட் மனு தாக்கல் செய்ததால் வழக்கு பற்றிய அறிவிப்பானது கேவியேட் தாக்கல் செய்த வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்டு வழக்குரை அதிகாரம் தாக்கல் செய்வதற்காக போடப்பட்டு எங்கள் தரப்பில் வழக்குரை அதிகாரம் வழக்கறிஞருக்கு கொடுக்காததால் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால், அதுப்பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 01:30</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.01.21 16:44:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.